## நம்மாழ்வார் அருளிச் செய்த
## திருவாய்மொழி
## இரண்டாம் பத்து

### ஆறாம் திருவாய்மொழி - வைகுந்தா
### ஆழ்வாரது நைச்யானுஸந்தானத்தைக் கண்டு எம்பெருமான் இவரது பிரிவைச் சங்கித்து நைய, ஆழ்வார் அச்சங்கையைப் போக்குதல்

** வைகுந்தா! மணிவண்ணனே! * என் பொல்லாத் திருக்குறளா! என்னுள் மன்னி *
வைகும் வைகல் தோறும் * அமுதாய வான் ஏறே! **
செய் குந்தா அருந்தீமை உன் அடியார்க்குத் தீர்த்து * அசுரர்க்குத் தீமைகள்
செய் குந்தா! * உன்னை நான் பிடித்தேன் கொள் * சிக்கெனவே 1

சிக்கெனச் சிறிதோர் இடமும் * புறப்படாத் தன் உள்ளே * உலகுகள்
ஒக்கவே விழுங்கிப் * புகுந்தான் புகுந்ததற்பின் **
மிக்க ஞான வெள்ளச் சுடர் விளக்காய்த் * துளக்கற்று அமுதமாய் * எங்கும்
பக்கம் நோக்கறியான் * என் பைந்தாமரைக் கண்ணனே 2

தாமரைக் கண்ணனை * விண்ணோர் பரவும் தலைமகனை * துழாய் விரைப்
பூ மருவு கண்ணி * எம்பிரானைப் பொன் மலையை **
நாம் மருவி நன்கேத்தி உள்ளி வணங்கி * நாம் மகிழ்ந்து ஆட * நாவலர்
பா மருவி நிற்கத் தந்த * பான்மையே வள்ளலே! 3

வள்ளலே! மதுசூதனா! * என் மரதக மலையே! * உனை நினைந்து
எள்கல் தந்த எந்தாய்! * உன்னை எங்ஙனம் விடுகேன்? **
வெள்ளமே புரை நின் புகழ் குடைந்தாடிப் பாடிக் * களித்து உகந்து உகந்து *
உள்ள நோய்கள் எல்லாம் துரந்து * உய்ந்து போந்து இருந்தே 4

உய்ந்து போந்து என் உலப்பிலாத * வெந்தீ வினைகளை நாசம் செய்து * உனது
அந்தமில் அடிமை அடைந்தேன் * விடுவேனோ? **
ஐந்து பைந்தலை ஆடரவணை மேவிப் * பாற்கடல் யோக நித்திரை *
சிந்தை செய்த எந்தாய்! * உன்னைச் சிந்தை செய்து செய்தே 5

உன்னைச் சிந்தை செய்து செய்து * உன் நெடு மா மொழி இசை பாடி ஆடி * என்
முன்னைத் தீவினைகள் * முழு வேர் அரிந்தனன் யான் **
உன்னைச் சிந்தையினால் இகழ்ந்த * இரணியன் அகல் மார்வம் கீண்ட * என்
முன்னைக் கோள் அரியே! * முடியாதது என் எனக்கே? 6

முடியாதது என் எனக்கேல் இனி? * முழு ஏழ் உலகும் உண்டான் * உகந்து வந்து
அடியேன் உள் புகுந்தான் * அகல்வானும் அல்லன் இனி **
செடியார் நோய்கள் எல்லாம் துரந்து * எமர் கீழ் மேல் எழு பிறப்பும் *
விடியா வெந்நரகத்து * என்றும் சேர்தல் மாறினரே 7

மாறி மாறிப் பல பிறப்பும் பிறந்து * அடியை அடைந்து உள்ளம் தேறி *
ஈறில் இன்பத்து இருவெள்ளம் * யான் மூழ்கினன் **
பாறிப் பாறி அசுரர் தம் * பல் குழாங்கள் நீறெழ * பாய் பறவை ஒன்று
ஏறி வீற்றிருந்தாய்! * உன்னை என்னுள் நீக்கேல் எந்தாய்! 8

எந்தாய்! தண் திருவேங்கடத்துள் நின்றாய்! * இலங்கை செற்றாய்! * மராமரம்
பைந்தாள் ஏழ் உருவ * ஒரு வாளி கோத்த வில்லா! **
கொந்தார் தண்ணந்துழாயினாய்! அமுதே! * உன்னை என்னுள்ளே குழைத்த எம்
மைந்தா! * வான் ஏறே! * இனி எங்குப் போகின்றதே? 9

போகின்ற காலங்கள் போய காலங்கள் * போகு காலங்கள் * தாய் தந்தை உயிர்
ஆகின்றாய்! * உன்னை நான் அடைந்தேன் விடுவேனோ? **
பாகின்ற தொல் புகழ் மூவுலகுக்கும் * நாதனே! பரமா! * தண்வேங்கடம்
மேகின்றாய்! * தண் துழாய் விரை நாறு கண்ணியனே! 10

** கண்ணித் தண் அந்துழாய் முடிக் * கமலத் தடம் பெருங்கண்ணனை * புகழ்
நண்ணித் தென்குருகூர்ச் * சடகோபன் மாறன் சொன்ன **
எண்ணில் சோர்வில் அந்தாதி * ஆயிரத்துள் இவையும் ஓர் பத்து இசையொடும் *
பண்ணில் பாட வல்லார் அவர் * கேசவன் தமரே 11

**ஆழ்வார் திருவடிகளே சரணம்**

---